முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.9.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, இராணி மேரி கல்லூரி வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அதன் அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த. வேலு, இ. பரந்தாமன், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.9.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை சார்பில் சாலை விபத்தில் சிக்கியவர்களை விபத்துக்குள்ளான வாகனங்களில் இருந்து மீட்டெடுக்கும் பணிக்கான "வீரா (VEERA – Vehicle for Extrication in Emergency Rescue and Accidents) அவசரகால மீட்பு மற்றும் விபத்துக்களிலிருந்து மீட்கும் வாகனத்தின் பயன்பாட்டினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்திப் ராய் ரத்தோட், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இயக்குநர் – நடிகர்

மாரிமுத்து மறைவு - தமிழ்த் திரையுலகுக்கு பேரிழப்பாகும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

'சென்னை, செப். 10–

இயக்குநர்-நடிகர் மாரிமுத்து அவர்களின் மறைவு தமிழ்த் திரையுலகுக்கு நிச்சயம் ஒரு பேரிழப்பாகும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இயக்குநரும், நடிகருமான மாரிமுத்து அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

கண்ணும் கண்ணும், புலிவால் ஆகிய திரைப்படங்களின் இயக்குநரும், பிரபல நடிகருமான திரு. மாரிமுத்து அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

தேனி மாவட்டத்தில் இருந்து சினிமா கனவுகளுடன் சென்னை வந்து, பல்லாண்டுகள் உதவி இயக்குநராகப் பணிபுரிந்து, இயக்குநர் ஆனவர் திரு. மாரிமுத்து அவர்கள். ஐம்பதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து, யதார்த்தமான நடிகராகவும் பாராட்டப்பட்டவர். மேலும், சின்னத்திரையிலும் தனது நடிப்புத் திறனால் தமிழ்நாட்டின் ஒவ்வொரு இல்லத்திலும் அறிமுகமானவராகப் புகழ்பெற்றார்.

மேலும், பல நேர்காணல்களிலும் நிகழ்ச்சிகளிலும் இவரது பேச்சுகள் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு சேர்க்கும் வகையில் அமைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது மறைவு தமிழ்த்திரையுலகுக்கு நிச்சயம் ஒரு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து துயரில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத்தினருக்கும், திரைத்துறை நண்பர்களுக்கும், இரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

காரைக்குடியில் கலை இலக்கிய – பேரவை சார்பில்

கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு பள்ளி மாணவ - மாணவிகளுக்கான போட்டிகள்!

300க்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்பு! அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் - வண்ணை அரங்கநாதன் பங்கேற்பு! மு.தென்னவன் தலைமை!

சிவகங்கை. செப்,10-

சிவகங்கை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டினை முன்னிட்டு ஒன்றிய நகர, பேரூர், கழகங்களின் சார்பிலும், மற்றும் பல்வேறு அணிகளின் சார்பிலும், கருத்தரங்கம், பொதுக்கூட்டம், நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக சிவகங்கை மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் சார்பில் காரைக்குடி வித்யாகிரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஒன்பது முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளுக்கான ஒப்பு வித்தல் போட்டி முன்னாள் அமைச்சரும், மாநில இலக்கிய அணிபுரவலருமான மு.தென்னவன் தலைமையில் காரைக்குடி நகர்மன்றத் தலைவர் சே.முத்துதுரை, காரைக்குடி நகர்கழக செயலாளர் என்.குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ஆ.மு.சண்முக நாதன் வரவேற்றுப் பேசினார். போட்டியை மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் வண்ணை அரங்கநாதன் துவக்கிவைத்தார் . இந்தப் போட்டிகளில் மாவட்டத்திலி ருந்து 38க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள், கலந்து கொண்டார்கள் . கலைஞர் எழுதிய கவிதைகள் கலைஞர் எழுதிய திரைப்பட வசனம் ஒப்பு வித்தல் போட்டி ஆகியவை நடைபெற்றது.

போட்டியின் ஒருங்கிணைப்பாளராக கவிஞர் ஜெயங்கொண்டான், போட்டி நடுவர்களாக முனைவர் சங்கரதாஸ், மு.பழனியம்மாள் திருக்குமரன், கா.சுபா , மா.மணிகண்டன், லெ. தீபா, பாரதி ராணி, ராமேஸ்வரி, ஹேமமாலினி, பா. டேனியல், ச. செல்வகுமார், வழக்கறிஞர் மணி பாரதி பேராசிரியர் ஆனந்தி வழக்கறிஞர் ரா.மணிமேகலை நாராயண சேவகன், மெ.மெய்யப்பன், ஜோதி சுந்தரேசன், பாண்டி குமார், ஆகியோர் பணியாற்றினார்கள். போட்டிகளில் கவிதை போட்டியில் முதல் பரிசு பெற்ற வித்யா கிரி பள்ளி மாணவன் பிரபாகரனுக்கு ரூபாய் 5000 ம், இரண்டாவது பரிசுத் தொகை கல்லைசேர்ந்த மாணவி க. தீபாவிற்கு ரூபாய் 3000ம்,மூன்றா வது பரிசாக காரைக்குடி மகரிஷி வித்யா வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி மாணவி க.டேனியா ருபினாவிற்கு ரூபாய் 2000 ம், கலைஞர் திரைப்பட வசனம் ஒப்புவித்தல் போட்டியில் முதல் இடம் பெற்ற திருப்பத்தூர் லிப்ட்ரா மெட்ரிக் பள்ளி மாணவன் அப்துல் ரகுமானிற்கு ரூபாய் 5ஆயிரமும், இரண்டாம் இடம்பெற்ற காரைக்குடி வித்யாகிரி மெட்ரிக் மேல்நிலைப் மேல்நிலைப் பள்ளி மாணவி சுபிட்க்ஷாவிற்கு ரூபாய் 3000ம் , மூன்றாவது பரிசாக காரைக்குடி மகரிஷி வித்யா மந்திர் பள்ளிமாணவி தேஜர்யாவிற்கு ரூபாய் 2000ம் மற்றும் சான்றிதழ்களை கூட்டுறவுத்துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான கேஆர். பெரிய கருப்பன் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

இவர்கள் அடுத்து நடைபெறும் மண்டல அளவிலான போட்டியில் கலந்து கொள்வார்கள். மேலும் மாணவ - மாணவிகளை ஊக்கப்படுத்தும் வகையில் இரண்டு போட்டிகளிலும் பங்கேற்ற மாணவ - மாணவிகளுக்கு தலா ரூபாய் ஆயிரம் வீதம் 10 மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 10ஆயிரத்தினை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் வித்யாகிரி பள்ளி தாளாளர் முனைவர் சுவாமிநாதன் , மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன் தொழிலதிபர் துவார்சிங்கப்பூர் சந்திரசேகர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், பொதுக்குழு உறுப்பினர் திருமதி தெய்வானை இளமாறன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் ருக்மா சரவணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மகளிர் அணி நிர்வாகிகள் கலா காசிநாதன், லட்சுமி கணேஷ், சத்யா ராஜா, தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் திவ்யா சக்தி நிர்வாகிகள் சொ. கண்ணன், சேவியர்,மும்பை ஜேசுராஜா, மீனவரணி அண்ணாமலை, புதூர்கண்ணன், ஒன்றியத் துணை செயலாளர் முத்துகுமார்,

மாவட்ட கலை இலக்கிய பேரவை பகுத்தறிவு பேரவை தலைவர் பி. திருநாவுக்கரசு, துணைத்தலைவர் காரை. சுரேஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் குரு .போஸ், ஜெ.ராஜேந்திரன் ரா. செல்வகுமார், அ.அபி, திருமதி ஆர்.ராதிகா, பா. சுரேஷ் குமார், அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். காரைக்குடி நகர செயலாளர் என். குணசேகரன் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் ஆ.மு.சண்முக நாதன், மாவட்ட தலைவர் தி.திருநாவுக் கரசு, மாவட்ட துணைத்தலை வர் காரை. சுரேஷ், மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, சோழபுரம், கன்னக்கட்டை, புங்கவர்நத்தம், போடுபட்டி, டி.சண்முகபுரம் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற "மக்கள் களம் மக்கள் குறை கேட்டல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, பயனாளிகளுக்கு உழவர் அட்டை, திருமண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, இலவச வீட்டு மனைப் பட்டா உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி. உடன் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான திருமிகு பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கூடுதல் ஆட்சியர் சுபம் தாக்கரே ஞானதேவ்ராவ், ஒன்றிய செயலாளர் நவநீதகண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூரில் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு

அகில இந்திய மகளிர் கபடி போட்டி!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பரிசுகளை வழங்கினார்!

சிவகங்கை, செப். 10-

சிவகங்கை மாவட்டத்தில் முத்த மிழறிஞர் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு பொதுக்கூட்டங்கள், இன்னிசை நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள், உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் ஒன்றிய நகர பேருர்கழகங்கள் மற்றும் பல்வேறு அணிகளின் சார்பில் நடைபெற்று வருகிறது.

அதன் தொடர்ச்சியாக 25ஆம் தேதிமுதல் 27ம்தேதி முடிய சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாவட்ட இளைஞரணி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி, மாவட்ட மாணவரணி, மாவட்ட அயலக அணி, மற்றும் சார்பு அணிகள் சார்பில் அகில இந்திய அளவிலான மின்னொளி மகளிர் கபடி போட்டி நடைபெற்றது.

மூன்று நாட்கள் நடைபெற்ற போட்டியி ல் அரியானா, பஞ்சாப் சித்தூர் மங்களூர் தில்லி, வடக்கு ரயில்வே ,தெற்கு ரயில்வே, மற்றும் தமிழகத்திலிருந்து அந்தியூர் ,ஈரோடு ,கோபி, சென்னைஉட்பட 20க்கும் மேற்பட்ட அணிகள் மூன்று நாட்களிலும் பங்கேற்றார்கள்.

27ஆம் தேதி இறுதிப் போட்டிகள் அந்தியூர் அணிக்கும்,கோபி பி.கே. அணிக்கும்நடைபெற்றது. இதில்அந்தியூர் மங்கலம் உயர்நிலைப்பள்ளி அணி முதல் இடத்தைப் பிடித்தது.. இரண்டாவது இடத்தை கோபி பி.கே.அணியும் ,மூன்றாவது இடத்தைமும்பை வடக்கு ரயில்வே அணியும் ,நான்காவது இடத்தை சென்னை. வி.எம்.பி. அணியும் பெற்றது.வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசாக ரூபாய் 2லட்சம், இரண்டாவது பரிசு ரூபா ய் 1/2லடசம்,மூன்றாவது பரிசுத் தொகை ரூபாய் 1லட்சம், நான்காவது பரிசுத்தொகை ரூபாய் 75ஆயிரம் மற்றும் கோப்பைகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கி பாராட்டினார்.

மேலும் வெற்றிபெற்ற நான்கு அணிகளுக்கு தனது சொந்த நிதியாக. தலா ரூபாய் 10ஆயிரம்வீதம் நான்கு அணிகளுக்கு ரூபாய் 40ஆயிரத்தினை. அமைச்சர் பெரியகருப்பன் வழங்கினார். முதல்நாள் போட்டியினைசிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான ,கே ஆர். பெரிய கருப்பன் திருமதி பிரேமா பெரியகருப்பன் ஆகியோர் தலைமையேற்று துவக்கி வைத்தார்கள்.

அணிகளுக்கான பல்வேறு பரிசுகளை தொழிலதிபர் துவார் சந்திரசேகர், திருப்பத்தூர் ஒன்றிய குழு தலைவர் எஸ். சண்முகவடிவேலு, முதல் பரிசுத்தொகை ருபாய் 2லட்சத்தினை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், இரண்டாவது பரிசுத்தொகை ரூபாய் 1.50லட்சத்தினை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், மூன்றாவது பிரிசுத்தொகை ரூபாய் ஒரு லட்சத்தினை மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சரவணன், நான்காவது பரிசாக ரூபாய் 75 ஆயிரத்தினை மாவட்ட மாணவரணி அமைப்பாளர். கதி. ராஜ்குமார் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்த அகில இந்திய அணி கபடி விளையாட்டுப் போட்டியில் ஹரியானா, பஞ்சாப், மேற்கு வங்காளம், டில்லி, மங்களூர், கேரளா ,சித்தூர், தானே, தெற்கு ரயில்வே, வடக்கு ரயில்வே, மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து பல்வேறு அணி வீரர்கள் பங்கேற்றார்கள்.

இந்த நிலையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மாவட்ட அவைத்தலைவர் அ.கணேசன், மாவட்ட துணை செயலாளர் கள் த.சேங்கைமாறன்,திருமதி ஜோன்ஸ்ருசோ, கே.எஸ். எம். மணிமுத்து ,முன்னாள் எம்.எல்.ஏக்கள் எஸ்.மாரியப்பன்கென்னடி, வி.பி.ராசன், இலக்கிய அணி பெருநாழி போஸ், நகர்கழக செயலாளர்கள் என்.குணசேகரன், பெரி.பாலா,ஒன்றிய செயலாளர்கள் எஸ்.சண்முகவடிவேலு, குன்னக்குடி சுப்பிரமணியன், விராமதி மாணிக்கம்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார், துணை அமைப்பாளர் கே.எம். பொற்கோ,நகர்மன்ற தலைவர் எஸ்.முத்துதுரை, பேரூராட்சி மன்றத்தலைவர்கள் கோகிலராணி நாராயணன் பிரியதர்ஷனி கவிராஜ், கே.எஸ்.எம்.பழனியப்பன், துணை த்தலைவர் கான் முகமது,

மாவட்ட அயலக அணி தலைவர்கேப்டன்சரவணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து ,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார்,ஒன்றியக்குழு துணைத் தலைவர் முத்துச்சாமி, பல்வேறு அணி நிர்வாகிகள் சன்சீமான்சுப்பையா,முகமது கனி, பஷிர்முகமது,இப்ராகிம் பொருளாளர் ஏ.எம். கண்ணன் ராம.ரவி,மனோகரன்,! , ஷாஜகான் ,பசும் பொன்பாலா, இபுராகீம், அபுதாகீர், சேவியர், ,ராம.ரவி,இளைஞரணி மனோகரன், சோமசுந்தரம், உதயம் சண்முகம் ஒன்றியத்துணை செயலாளர் முத்துக்குமார் , உட்பட மாவட்டம் முழுவதிலுமிருந்து நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

போட்டியில் நடுவர்களாக காளிதாஸ்,கே.செல்வகுமார், சுந்தரராசன், மாவட்ட அமெச்சூர் கபடி கழக செயலாளர் ஜோதி மணி ஆகியோர் பணியாற்றினார்கள். விளையாட்டு போட்டிக்கான ஏற்பாடுகளை அனைத்து அணிகளின் சார்பில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில்

மக்கள் குறை தீர்க்கும் நிகழ்ச்சிகள்!

கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர் பி.கீதாஜீவன் பங்கேற்பு!

தூத்துக்குடி, செப். 10-

தி.மு.கழக துணைப் பொதுச்செயலாளரும்,தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்களும் சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்டதி.மு.கசெயலாளருமான பி.கீதா ஜீவன் ஆகியோர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி நிரல் விபரம்

நாள் : 11.09.2023

திங்கள்கிழமை

மாலை 4.30 மணி, ராஜாபுதுக்குடி மற்றும் சன்னதுபுதுக்குடி-கயத்தாறு மத்திய ஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொதுமக்களின் குறை கேட்டல்.

மாலை 5.30 மணி - சவலாப்பேரி கயத்தாறு மத்திய ஒன்றியம் - மக்கள் களம்-நிகழ்ச்சிமூலம்பொது மக்களின் குறை கேட்டல்.

மாலை5.45மணி - ஆசூர் -கயத்தாறுமத்தியஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

மாலை 6.15 மணி - கே.சிவஞானபுரம் - கயத்தாறு மத்திய ஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்,

மாலை 7.00 மணி - காப்புலிங்கம் பட்டி - கயத்தாறு மத்திய ஒன்றியம் - ஊராட்சி மன்ற அலுவலக புதிய கட்டிட திறப்பு விழா மற்றும் மக்கள் களம் - நிகழ்ச்சி,

நாள் : 12.9.2023

செவ்வாய்க்கிழமை

மாலை 4.30 மணி - பன்னீர்குளம் - கயத்தாறு கிழக்கு ஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொதுமக்களின் குறை கேட்டல்.

மாலை5.15மணி-வடக்கு மயிலோடை (தெற்கு மயிலோடை ஊராட்சி) - கயத்தாறு கிழக்கு ஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொதுமக்களின் குறைகேட்டல்,

மாலை 6.00 மணி - திருமலாபுரம் - கயத்தாறு கிழக்கு ஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொதுமக்களின் குறை கேட்டல்.

மாலை 6.45 மணி குருமலை (கழுகாசலபுரம் ஊராட்சி)கயத்தாறுகிழக்கு ஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொதுமக்களின் குறை கேட்டல்,

இவ்வாறு அமைச்சர் பி.கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

செட்டியபட்டி ஊராட்சியில் உள்ள மேல்நிலைப்பள்ளியில் புதிய பள்ளி வகுப்பறைகள் கட்டுவதற்கு ஆய்வு செய்ய வந்த ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கினார். அருகில் ஒன்றிய செயலாளர் முருகேசன், ஊராட்சிமன்ற தலைவர் ராஜா உட்பட பலர் உள்ளனர்.